Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-9**

Name : ராஜேஷ்
Father / Husband name : வேலு
Village : சத்தியமங்கலம்
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.02.2026

A1, A2 present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 01.02.2022 ந்தேதி பகல் 12.30 மணிக்கு வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 லட்சுமணன் என்பவர் நிலையம் ஆஜராகிகொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 28/2022, U/s 294(b),323,324,506(ii) IPC r/w 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் அபரஞ்சி மற்றும் ராஜீ ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான அபரஞ்சி, ராஜீ, லட்சுமணன், முனுசாமி, முருகன், பாண்டியராஜன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை

தேட அன்றையதினமே 15.00 மணிக்கு 1வது எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் வெள்ளிமேடுபேட்டை பஜாரில் காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துவரப்பட்டு பாராவசம் ஒப்படைத்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மற்ற எதிரி தலைமறைவாகி இருந்துள்ளார். பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எந்த தேதியில் பணிமாறுதலில் சென்றேன் என்றால் தேதி நினைவில்லை, 11 மாதங்கள் வெள்ளிமேடுபேட்டையில் பணியிலிருந்தேன். புகாரில் 100க்கும் மேற்பட்ட நபர்கள் திருவிழா சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். முந்தைய ஆண்டு திருவிழாவில் கணக்கு வழக்கு சரியில்லை என்று 1வது எதிரி கேட்டார் என்பது பிரச்சனை என்றால் சரிதான். அந்த கணக்கு வழக்குகளை நான் சரிபார்த்தேனா என்றால் இல்லை. இவர்களுக்குள் முன்விரோதம் உள்ளதாக சொல்லியுள்ளார்களா என்றால் எனது விசாரணையில் சொல்லவில்லை. இந்த வழக்கில் 1வது எதிரியை ஊர்மக்கள் தாக்கியதாக புகார் கொடுத்து அதனை நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியை யார் அடையாளம் காட்டி கைது செய்தேன் என்று வழக்குக்கோப்பில் இல்லை என்றால் சரிதான். செங்கல்லால் தாக்கியதாக சொல்லியும், எந்தவித செங்கல்லையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். காயம்பட்ட வத்துமலை என்பவரின் விபத்து பதிவேட்டில் 2வது காயம் Crush Injury என்று உள்ளது, கடித்த மார்க் உள்ளதா என்றால் Teath bite என உள்ளது. விபத்து பதிவேட்டில் Lossing of teath என்று உள்ளது என்றால் சரிதான். மனுதாரரிடம் நான் விபத்து பதிவேடு பெறவில்லை என்றால் சரிதான். வத்துமலை விபத்து பதிவேட்டில் 5 தெரிந்த நபர்கள் கையால் அடித்து கடித்துவிட்டதாக உள்ளது என்றால் சரிதான். வத்துமலையிடம் 5 தெரிந்த நபர்கள் கையால் அடித்து

கடித்துவிட்டதாக மருத்துவரிடம் சொல்லியது குறித்து தனிப்பட்ட முறையில் விசாரித்தேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டக்காயம் ஊர்மக்கள்பேசும் ஏற்பட்டத்தகராறில் கீழே விழுந்து ஏற்பட்டது, எதிரி புகார் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க அ.சா.1 புகார் கொடுத்து, வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-10**

Name : தமிழ்மணி
Father / Husband name : ராஜேந்திரன்
Village : விழுப்புரம்
Age : 33
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.02.2026

A1, A2 present. Both side counsel present.

முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய குற்ற எண் 28/2022, U/s 294(b),323,324,506(ii) IPC r/w 4 of TNPHW Act ன் படி பதிவு செய்த உதவி ஆய்வாளர் ராஜேஷ் முதல்கட்ட விசாரணையை முடித்து 1வது எதிரியை கைது செய்து பிறகு நான் 04.04.2023 ம் தேதி இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் 1 - 6 வரை விசாரணை செய்ததில் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் 7வது சாட்சி வத்துமாலை, 8 வது சாட்சி சங்கீதா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் காயம்பட்ட நபர்களுக்கு மருத்துவ சான்று வழங்கிய மருத்துவர் சுதாகர் அவர்களை விசாரித்து சங்கீதாவிற்கு ஏற்பட்டக்காயம் சொற்பக்காயம் என்றும், வத்துமலைக்கு சம்மந்தபட்ட ஆவணங்களை சமர்பிக்காததால் Opinion Reserved என சான்று வழங்கினார். **அ.சா.7 வத்துமலையின் விபத்து பதிவேடு அ.சா.ஆ. 6 ஆகவும், அ.சா.8 சங்கீதாவின் விபத்து பதிவேட்டுடன் கூடியக்காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை U/s 294(b),323,324,506(ii) IPC r/w 4 of TNPHW Act

@ U/s 294(b),323,324,352,506(ii) IPC r/w 4 of TNPHW Act ன் படி பிரிவு மாற்றம் செய்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் 2வது எதிரியை 05.09.2023 அன்று நீதிமன்ற பிணையில் சென்றுள்ளதால் வழக்கின் அனைத்து விசாரணையும் முடித்து எதிரிகள் மீது U/s 294(b),323,324,506(ii) IPC r/w 4 of TNPHW Act ன் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

மருத்துவரின் குவிமுச 161(3) ன் வாக்குமூலத்தில் வத்துமலைக்கு இரண்டு நபர்கள் கையால் அடித்து கடித்துவிட்டதாக உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சட்டப்பிரிவு நான் தயார் செய்தேனா என்றால் நான் தயார் செய்தேன். குற்ற இறுதி அறிக்கையில் உள்ள கையொப்பமும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் உள்ள கையொப்பமும் என்னுடையது தானா என்றால் என்னுடையது தான், அவசரத்தில் செய்தேன். நான் அவசரத்தில் கையொப்பம் செய்தும் 05.09.2023 குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தும் 2 ஆண்டுகள் காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கீதாவின் விபத்து பதிவேட்டில் தெரிந்த ஒருநபர் நீளமான குச்சியால் அடித்ததாக தான் சிகிச்சை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். செங்கல்லால் தாக்கியதாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாக மருத்துவரின் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். இரத்தக்கரை படிந்த துணிகளை இந்த வழக்கில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ன் வாக்குமூலத்தில் மோதிர விரலில் கடித்து இரத்தக்காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தும், விபத்து பதிவேடு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வத்துமலையின் விபத்து பதிவேட்டில் 5 நபர்கள் தர்ககியதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் மருத்துவரின் வாக்குமூலத்தில் 2 நபர்கள் தாக்கியதாகவும், புகாரில் 1 நபர் கடித்ததாகவும் விபத்து பதிவேட்டில் 5 நபர்கள் தாக்கியதாகவும் வெவ்வேறாக இருப்பதற்கு வத்துமலையை குறிப்பிட்டு விசாரித்தேனா

என்றால் இல்லை. சாட்சிகளை மறுவாக்குமூலம் செய்ததற்கு தனிஆவணம் தாக்கல் செய்துள்ளேனா ள்னாறல் இல்லை. திருவிழா கணக்குகளை கேட்டதால் பிரச்சை என்றபோதும், அதனை நான் பார்த்தேனா என்றால் இல்லை. ஊர்பொதுமக்கள் சேர்ந்து வத்துமலையை தாக்கியதால் வந்தது, எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரியை தாக்கியதற்கு புகார் கொடுத்தும், அதனை மறைத்து இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீளமான குச்சி, செங்கல் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.